DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# OS.No.246/2021

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கனிஷ்கர் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.02.2025

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**3-வது பி.வா.த.கு.வி.:**

கேள்வி : OS No:37/2009-ல் கண்ட சொத்தை வெள்ளைதாயிடம் இருந்து உங்கள் தாத்தா பணத்தை கொடுத்து சொத்தை மீட்டினார் என்பதற்கு எதாவது ஆவணம் இருக்கிறதா?

பதில் : தெரியாது.

கேள்வி : உங்கள் தாத்தாவிடம் மேற்கண்ட தாவா சொத்து சுவாதீனத்தில் இல்லாத சமயத்தில் அந்த வழக்கு சொத்தினை நீங்கள் கிரையம் பெற்ற தேதியில் இருந்து மூன்று ஆண்டு காலத்திற்குள் வழக்கு சொத்து உங்களுக்கு பாத்தியப்பட்டது என தாவா எதுவும் தாக்கல் செய்தீர்களா ?

பதில் : நான் சொத்தை வாங்கும் பொழுது வழக்கு சொத்து என் தாத்தா வசம் தான் இருந்தது.

கேள்வி : அந்த வழக்கு சொத்து உங்கள் தாத்தா சுவாதீனத்தில் இருந்தது என்பதற்கான ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா?

பதில் : இல்லை.

கேள்வி : மேற்கண்ட வழக்கில் கண்ட பிராது மற்றும் எதிர் வழக்குரையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : மேற்கண்ட வழக்கில் உங்கள் தாத்தா எதிர் உரை தாக்கல் செய்த நாளில்

அந்த எதிர் உரையில் தாவா சொத்து சுவாதீனத்தில் இல்லை என்று கூறியதால் தான் அந்த எதிர் உரையை இந்த வழக்கில் தாக்கல் செய்தால் உங்கள் வழக்கு காலாவதி சட்டத்தால் பாதிக்கப்படும் என்று தெரிந்து விடும் என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : ஆக மேற்கண்ட வழக்கில் உங்கள் தாத்தாவிடம் தாவா சொத்து சுவாதீனம் இல்லாததால் நீங்கள் தாக்கல் செய்த இந்த வழக்கும் காலாவதி சட்ட தோசத்ததால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : இந்த வழக்கு பரிகாரத்தின் படி பார்த்தால் தாவா சொத்து உங்கள் சுவாதீனத்தில் இல்லை என்றால்?

பதில் : வழக்கு தாக்கல் செய்த காலத்தில் சுவாதீனத்தில் இல்லை.

கேள்வி : தாவா சொத்து மீட்க இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதை பார்க்கும் பொழுது நீங்கள் தாக்கல் செய்த அடங்கல் ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : இந்த வழக்கில் நீங்கள் இடைகால லாபங்கள் தாவா சொத்திலிருந்து கிடைக்க வேண்டும் என்ற பரிகாரம் கேட்கவில்லை என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : இந்த வழக்கில் குறிப்பிட்ட சொத்தில் காணாமல் போனதாக சொல்லும் தென்னை மரங்கள் குறித்து பரிகாரங்கள் எதுவும் கேட்கவில்லை என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் பரிகாரத்தில் தென்னை மரங்கள் குறித்து எதுவும் கேட்கவில்லை என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : தாவா சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக உங்கள் உறவினர் யார், எந்த தேதியில், எப்படி தகவல் சொன்னார்கள்?

பதில் : வாசகர் மற்றும் எனது அப்பா தகவல் சொன்னார். அக்டோபர் மாத இறுதியில் 2016–ம் ஆண்டு.

கேள்வி : பிரதிவாதிகள் காவல் துறையில் உயர் அதிகாரிகளாக பணிபுரிந்து வருவதால் புகார் எதும் கொடுத்தால் கடும் பின் விளைவு ஏற்படும் என்று என என் வழக்குரையில் சொல்லியுள்ள நியைில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதி பேராணை மனு நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை ?

பதில் : வழக்கறிஞரின் அறிவுரையின் படி இந்த வழக்கு தாக்கல் செய்தோம்.

கேள்வி : தாவா சொத்தில் 3–வது பிரதிவாதி தென்னை மரங்களை நல்ல முறையில்

பராமரித்து வருகிறார் என்றால் ?

பதில் : தவறு. சமீபத்தில் அவர் மீது ஒரு புகார் கொடுத்து விசாரணை நிலுவையில் உள்ளது. அதற்கான ஆவணம் எதுவும் தற்போது வரை தாக்கல் செய்யவில்லை.

கேள்வி : தாவா சொத்தில் நீங்களோ, உங்கள் தாத்தா விஸ்வநாதனோ சுவாதீனத்தில் இருந்து வரவில்லை என்றால் ?

பதில் : தவறு.

கேள்வி : உங்கள் தாத்தாவே தாவா சொத்தில் சுவாதீனம் இல்லாத நிலையில் நீங்க்ள அவருக்கு எதிரான நிலைபாட்டை எடுத்து இந்த வழக்கு நடக்கிறது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : தாவா சொத்தை குடும்ப பாகபிரிவினை மூலம் 3-ம் பிரதிவாதி அடைந்து அனுபவித்து வருகிறார் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் பிராதில் 3-ம் பிரதிவாதி ஓ.எஸ்.நம்பர்.37/2009-ல் தாவா சொத்திற்கான தொகையை கொடுத்து விட்டு சுவாதீனத்தை வாதியாகிய நீங்கள் எடுத்து கொள்ளுங்கள் என்று பிரதிவாதி பிரச்சனை செய்ததாக கூறியுள்ளீர்கள் என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : ஓ.எஸ்.712/1998 பாளையம் முன்சிப் கோர்ட் வழக்கில் உங்கள் தாத்தா வாதியாகவும், உங்கள் அப்பா பிரதிவாதியாகவும், மேல் முறையீட்டு வழக்கு எண்.49/1999 பெரியகுளம் சார்பு நீதிமன்ற வழக்கில் அப்பீல் வாதியாக உங்கள் தகப்பனாரும், எதிர் வாதியாக உங்கள் தாத்தாவும் இருந்து வந்த பொழுது அவர்களுக்கு இடையே பிரச்சனை இருந்த வந்த கால்த்தில் இருவருக்கும் இருந்த முன் விரோதம் தொடர்ந்து இருந்ததால் பிராது சொத்தை உங்களுக்கு கிரையம் கொடுக்க வாய்பில்லை என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : உண்மையிலேயே உங்கள் தாத்தா தாவா சொத்தை உங்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற மன நிலையில் இருந்தால் நீங்கள் பேரன் என்பதால் உங்களுக்கு தானமாக தான் கொடுத்திருப்பாரே தவிற கிரையமாக கொடுக்க வாய்ப்பே இல்லை என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : வழக்குரை சொத்தீன் சுவாதீனத்தில் உங்கள் தாத்தா விஸ்வநாதன் அறிய, பிரதிவாதிகளின் அம்மா வெள்ளைதாய் தாவா சொத்து சுவாதீனத்தில் இருந்து வந்து அப்பால் பிரதிவாதிகள் குடும்ப பாக பிரிவின் படி 3-ம் பிரதிவாதியின் பங்கிற்கு தாவா சொத்து ஒதுக்கீடு செய்யப்பட்டு அதையும் நீங்களும், உங்கள் அப்பாவும் அறிய நீங்கள் உண்மைக்கு விரோதமாக தவறான ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : ஆகையால் நீங்கள் கேட்டு இருக்க கூடிய பரிகாரங்கள் உங்களுக்கு கிடைக்க தக்கதல்ல என்றால் ?

பதில் : சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 18.02.2025 அன்று செவ்வாய்க்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.02.18 17:08:25 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
18.02.2025.